**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 193** **நாள்: 29.11.2018**

# பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் தீங்குகள் மற்றும் நோய்த் தடுப்பு குறித்து விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது

=====

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறை சார்பாக பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் தீங்குகள் மற்றும் நோய்த் தடுப்பு குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர். திரு. தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, சென்னை மாநகர் முழுவதும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் தீங்குகள் மற்றும் நோய்த் தடுப்பு குறித்து விழிப்புணர்வு முகாம் இன்று (29.11.2018) மண்டலம்–4க்கு உட்பட்ட புதிய வண்ணாரப்பேட்டையில் உள்ள சென்னை மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இம்முகாமில் 1490 மாணவ, மாணவியர்கள் மற்றும் 70 ஆசிரியர்கள் பங்கு பெற்றனர். பிளாஸ்டிக் உபயோகிப்பதினால் ஏற்படும் சுகாதார கேடுகள், ஒருமுறை பயன்படுத்தக் கூடிய மக்காத பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்து பாரம்பரியமாக பயன்படுத்தக் கூடிய வாழை இலைகள், பாக்கு மர தட்டுகள், துணிப்பைகள், சணல் பைகள் போன்றவற்றை பயன்படுத்துவதன் அவசியம் குறித்து விளக்கப்பட்டது. இம்முகாமில் கலந்து கொண்ட அனைவரும் பிளாஸ்டிக் தடுப்பு குறித்த உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

மேலும், டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் கொசுக்கள் உருவாகும் விதம், அதன் வாழ்க்கை சுழற்சி, உருவாகாமல் தடுக்கும் முறைகள், குப்பைகளை வகைப் பிரித்து அளித்தலின் அவசியம் முதலியன குறித்தும் விழிப்புணர்வு வழங்கப்பட்டது. மிக்கிமௌஸ் போன்று வேடமணிந்த நபரால் மாணவ, மாணவியர்கள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டது. பின்னர், மாணவ, மாணவியர்கள் அருணாச்சல ஈஸ்வரர் கோயில் தெருவின் ஒரு புறத்தில் பிளாஸ்டிக் மற்றும் நோய்த் தடுப்பு விழிப்புணர்வு பதாகைகளுடன் மனிதச் சங்கிலி அமைத்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர். டி.ஜி. சீனிவாசன், செயற்பொறியாளர் எஸ்.தேவேந்திரன், மண்டல சுகாதார அலுவலர் மருத்துவர்.ஹேமமாலினி, உதவி கல்வி அலுவலர் கே. தணிகைவேல், இன்னர்வீல் ஹிருதயா முஜேஷ், பசுமைப் படை ஜி.தங்கராஜ், தலைமையாசிரியை ஜீலியட் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**